[1989 ஏப்ரல் 26

இணைப்பு II.

நிதித்துறை (ஓய்வூதியம்.).

கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

இக் கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன :—

	ரூ.
2071. ஒய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்	185,50,56,000
2235. சமூகப் பாதுகாப்பு நலன் ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள்.	2,75,55,000
	188,26,11,000

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் உட்பட மானிய உதவிபெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்கள் உள்ளாட்சி மன்றங்களின் ஆசிரியர்கள் அல்லது நேர்விற்கேற்ப அவர் தம் குடும்பங்களைப் பொறுத்தவரையில் ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வுதியங்கள், பணிகொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை, குடும்ப ஓய்வூதியம் முதலியவை குறித்த செலவுகளைச் செய்வதற்கு இக் கோரிக்கை ஏற்பட்டுள்ளது.

பொது.

ஒய்வூதிய நன்மைகளை வழங்கும் விஷயத்தில், மத்திய அரசின் விதிகள்/ஆணைகளையே மாநில அரசு விழக்கமாக பின்பற்றுகிறது. அவ்வாறே, மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படுகிற அதே வீதத்தில் ஓய்வூதிய நன்மைகள் சிலவற்றை அரசுவழங்கியுள்ளது. மத்திய அரசின் ஓய்வூதிய நடைமுறைக்கேற்ப, ஓய்வூதியம், பணிக்கொடை, சிறப்பு ஓய்வூதிய, பணிக்கொடை ஆகியவற்றைக் கணக்கிடும் நடைமுறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இறப்பு ஓய்வூதிய பணிக்கொடையின் உயரளவு தொகையை ரூ. 50,000லிருந்து ரூ. 1 இலட்சத்திற்கு அரசு உயர்த்தியுள்ளது. ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி வழங்குகிற விஷயத்தில்; மத்திய அரசின் ஓய்வூதிய நடைமுறையை அரசு பின்பற்றியுள்ளது.

1989 ஏப்ரல் 26]

ஒய்வூதியம்.

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதி பணி புரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவார். ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாதகால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. உயரளவாக 33 ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 33 ஆண்டுக்குக் குறைவான தகுதிப்பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் குறைக்கப்படும். குறைந்தளவு ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூ. 245 ஆகும். உயரளவு ஓய்வூதியத்திற்கு உச்சவரம்பு ஏதுமில்லை.

பணிக்கொடை.

பத்து ஆண்டுக்குக் குறைவாக தகுதிப்பணி புரிந்தவர்களுக்கு பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுபெற்ற ஒவ்வொரு ஆறுமாத பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்கிற ஒரே சீரான வீதத்தில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டுமொத்த தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வூதிய பணிக்கொடைக்கு கூடுதலாக இத்தொகை வழங்கப்படுகிறது. இதற்குக் குறைந்தளவு அல்லது உயரளவு வரம்பு ஏதுமில்லை.

இறப்பு-பணிக் கொடை.

பணியில் இருக்கும் போது மரணமடைகின்ற பின்வரும் வீதங்களில் இறப்பு-பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

பணிக்காலம்.	பணிக்கொடையின் அளவு.
1. ஓராண்டுக்குக் குறைவாக இருந்தால்.	மாத ஊதியத்தின் இருமடங்கு
2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக ஆனால், ஐந்தாண்டுக்குக் குறைவாக இருந்தால்.	மாத ஊதியத்தின் ஆறுமடங்கு
3. ஐந்தாண்டு அல்லது அதற்கு அதிகமாக இருந்து ஆனால் இருபதாண்டுக்குக்குறைவாக இருந்தால்.	மாத ஊதியத்தின் இருபது மடங்கு.

[1989 ஏப்ரல் 26

4 இருபதாண்டு அல்லது அதற்கு அதிகமாக இருந்தால்.	உயரளவாக 33 மடங்கு மாத ஊதியத்திற்குட்பட்டு முடிக்கப்பட்ட ஒவ்வோர் ஆறு மாத தகுதிப்பணிக்கும் அரை மாதச் சம்பளம் ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்பு பணிக்கொடை, எந்த நேர்விலும் ரூ. 1 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது.

ஓய்வுகாலப் பணிக்கொடை.

ஒருவர், ஐந்தாண்டுத் தகுதிப்பணியை முடித்திருந்து, பணி குறித்த பணிக்கொடை அல்லது ஓய்வூதியம் பெறத்தகுதியுடையவராக இருந்தால், அவருக்கு ஓய்வு பெறும்போது, மாத ஊதியத்தில் $16\frac{1}{2}$ மடங்கு என்ற அதிக அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறுமாத தகுதிப்பணிக்கும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வு காலப்பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. உயரளவு ஓய்வு காலப் பணிக்கொடையின் உச்சவரம்பு ரூ. 1 இலட்சம் ஆகும்.

குடும்ப ஓய்வூதியம்.

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். அவர் பணியிலிருக்கும் போது இறந்தால் அவருடைய குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுக் காலம் பணியாற்றி இருக்க வேண்டும். ஓய்வுபெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருக்க வேண்டும். இருப்பினும், 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

ஒருவர் இறக்கும்போது, அல்லது ஓய்வுபெறும்போது, கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 30 சதவீதத் தொகை என்ற ஒரே சீரான விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது. ஒருவர் 7 ஆண்டுக் காலம் தொடர்ந்து பணியாற்றிய பிறகு பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்கு, அவர் இறந்துவிட்ட பிறகு ஓராண்டுகால அளவிற்கு அல்லது வயது முதிர்வு காரணமாக வழக்கமாக ஓய்வு பெறக்

1989 ஏப்ரல் 26]

கூடிய நாள் வரையில் இதில் எது முந்தியதோ அந்த காலம் வரையில் அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் 50 சதவீதம் என்ற அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அதன் பிறகு, கடைசியாகப் பெற்ற சம்பளத்தில் 30 சதவீதம் என்ற வழக்கமான வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. குறைந்த அளவு குடும்ப ஓய்வூதியம் ரூ. 245. அதிக அளவு குடும்ப ஓய்வூதியம் ரூ. 1,000.

விதவை, மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறு திருமணம் செய்துகொள்ளும் வரை அல்லது இறக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு இந்த குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய உரிய வயதடையாத குழந்தைகளுக்கு அதாவது அவர்களுடைய மகன்கள் அல்லது திருமணமாகாத மகள்களுக்கு 25 வயது ஆகும் வரை அளிக்கப்படுகிறது.

ஓய்வூதியத் தொகையில் ஒருபகுதியை மொத்தமாக்கி அளித்தல் :

ஓய்வூதியத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை மொத்தமாக்கி ஒட்டுமொத்தமாக பெற அரசு அனுமதித்திருக்கிறது. ஓய்வூதியம் வழங்குவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவ பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப்பிறகு, ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெறப்பட்டத் தொகையை மீண்டும் வழங்க அரசு அனுமதித்துள்ளது.

ஏனைய ஓய்வுகால நன்மைகள் :

1. மத்திய அரசின் முறைக்கேற்ப (அதாவது ஆண்டில் இரு முறை, ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய தேதிகளில் அகவிலைப்படி வழங்கப்படுவதுபோல) பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே ஓய்வூதியம் பெறுபவர்களும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும், அகவிலைப்படித் தவணைத் தொகை பெறுகிறார்கள்.

2. ஓய்வூதியம் பெறுபவர்களும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும், மருத்துவச் செலவுத் தொகையைத் திரும்பப் பெறும் திட்டத்திற்குப் பதிலாக திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 15 என்ற வீதத்தில் மருத்துவப்படி பெறுவதுடன் அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது/பணியில் இருக்கும்போதே இறந்தபோது, பெறத் தகுதிப்பெற்றிருந்த அதே மருத்துவச் சலுகைகளையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 ஏப்ரல் 26]

3. ஓய்வுபெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், உயரளவு 240 நாட்கள் ஈட்டிய விடுப்பிற்கு மட்டுமே தொகை பெற இயலும்.

4. ஓய்வுபெறும் பணியாளர், ஓய்வுபெற்றபின்னர், தங்களுடைய சொந்த ஊர் அல்லது வேறு ஒரு இடத்தில் வசிக்க விழைகிறாரோ அந்த இடத்திற்குச் செல்வதற்கான பணிமாற்றுப் பயணப்படி பெற அனுமதிக்கப்படுவார்.

5. 1–10-1987 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வுகாலப் பயன்களைக் கணக்கிடும்போது, 30–9–1987 வரை அனுமதிக்கப்பட்ட அகவிலைப்படி/கூடுதல் அகவிலைப்படியை, அகவிலைச் சம்பளமாக எடுத்துக்கொள்ளலாம் என்ற சலுகையை அரசு வழங்கியுள்ளது.

6. திங்களொன்றுக்கு ரூ. 750 வரை ஓய்வூதியம் பெறுபவர், ஒரு திங்களுக்கான ஓய்வூதியத் தொகை அல்லது ரூ. 100 இவற்றுள் எத்தொகை குறைவானதோ அத்தொகையைப் பண்டிகை முன்பணமாக பெறத் தகுதியுடையவராவார்.

7. திங்களொன்றுக்கு ரூ. 400-க்கு மிகாமல் ஓய்வூதியத் தொகை/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அத்தொகை அரசு செலவில் பணவிடை மூலமாக அனுப்பிவைக்கப்படுகிறது.

8. ரூ. 400-க்கும் அதிகமாக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர் ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின்படி தனியார் வங்கிகள் உட்பட ஏதேனும் ஒரு வங்கியின் மூலமாக அல்லது பொதுத் துறை வங்கித் திட்டத்தின்படி எந்த ஒரு பொதுத் துறை வங்கியின் மூலமாக அத்தொகையைப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

9. மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன், மாநில ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

உள்ளாட்சி மன்றக் கல்வி நிறுவனங்கள் உட்பட அரசு சாராக் கல்வி நிறுவனங்கன் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்

அரசு சாராக் கல்வி நிறுவனங்களில் (அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றக் கல்வி நிறுவனங்கள்) பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட அனைத்துப் பணியாளர்களும், மாநில அரசுப் பணியாளர்களுக்குரிய அனைத்துப் பயன்களையும் பெற அனுமதிக்கப்படுகின்றனர். மாநில அரசிடமிருந்து ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்படும் வீதத்திலேயே அவர்களும் அகவிலைப்படி/கூடுதல் அகவிலைப்படி பெறுகின்றனர்.

1989 ஏப்ரல் 26]

ஓய்வூதியக்காரர்களின் பிரச்சினைகள்/குறைகளைக் களைய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

1. ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகளைக் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தத்துறையில் ஓய்வூதியதாரர்கள் குறை தீர்ப்புப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

2. ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் களைவதற்கு வகை செய்யும் பொருட்டு காலாண்டிற்கு ஒரு முறை ஓய்வூதியதாரர்கள் சங்கத்துடன் அரசு ஆலோசனை நடத்தி வருகிறது.

3. ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகள் குறித்து ஆலோசிப்பதற்காக, கருவூலக் கணக்குகள் இயக்குநர், சென்னை, மாநிலக் கணக்குத்துறைத் தலைவர் ஆகியோருடன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றும் நடத்தப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS